# இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்

# விண்ணப்பங்கள் / பெயர் முன்மொழிவுக்கான அழைப்பு

# துணை வேந்தர் பதவி

1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 34ஆம் பிரிவு மற்றும் அதன் பின் வந்த திருத்தங்களினாலும் 2020 மே மாதம் 04ஆம் திகதிய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 02/2020ஆம் இலக்க சுற்றுநிருபத்தில் விதிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தின் நிர்வாக பேரவையினால் 2022-03-06ஆம் திகதி முதல் 2022-04-06ஆம் திகதி வரை பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவிக்கு விண்ணப்பங்கள்/ பெயர்மொழிவுகளுக்காக இலங்கைப் பிரஜைகளிடமிருந்து அழைப்பு விடுக்கிறது.

1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்திற்கு அமைவாக, துணைவேந்தர் பல்கலைக்கழகத்தின் முழுநேர உத்தியோகத்தராவார். துணைவேந்தரே பல்கலைக்கழகத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியும் மற்றும் கணக்கீட்டு அதிகாரியும் ஆவார். பல்கலைக்கழகப் பேரவை மற்றும் மூதவை என்பனவற்றின் பதவி வழி உறுப்பினரும், தலைவரும் ஆவார்.

1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் விதிமுறைகளின் பிரகாரம் துணைவேந்தர் பதவியிலிருந்து நீக்கப்பட்டால் அல்லது பதவியைக் கைவிட்டுச் சென்றால் தவிர மூன்று வருடங்களுக்கு அல்லது அவர் தனது அறுபத்து ஐந்து (65) வயதைப் பூர்த்தி செய்யும் நாள், இவ்விரண்டில் எது முன்வருகிறதோ அதுவரை பதவி வகிப்பார். விண்ணப்பதாரர்கள் / பெயர் மொழியப்பட்டவர்கள் அறுபத்து மூன்று (63) வயதிற்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

துணைவேந்தர், கல்விக்கான தலைமைத்துவத்தை வழங்குதல், முகாமைத்துவக் கொள்கைகளை உருவாக்குதல், அறிமுகப்படுத்துதல், நடைமுறைப்படுத்தல் ஆகியவற்றுக்கு பொறுப்பானவர் என்பதோடு பேரவை தீர்மானங்களை நடைமுறைப்படுத்தல், பல்கலைக்கழகத்தின் பொது நிர்வாகம் என்பவற்றுக்கு பொறுப்பானவராகவும், கல்வியின் உன்னதம், வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல், ஜனநாயக முகாமைத்துவம் மற்றும் சார்பு நிலையற்ற திறன்மிகு தலைமைத்துவம் ஆகியவற்றை நிலைநிறுத்தும் பொறுப்பும் துணைவேந்தருக்குரியது.

விண்ணப்பதாரர் இலங்கைப் பிரஜையாகவிருத்தல் வேண்டும் என்பதுடன் 63 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும். வலிமையான ஆராய்ச்சி பின்புலத்துடன், நிரூபிக்கப்பட்ட தலைமைத்துவ குணங்கள் மற்றும் பலதரப்பட்ட ஆர்வமுள்ள குழுக்களுடன் புறநிலையாக தொடர்புகொள்வதற்கான தனிப்பட்ட திறன்கள், கொள்கை சிக்கல்கள் பற்றிய தெளிவான புரிதல் மற்றும் முடிவுகளை திறம்பட செயல்படுத்துவதற்கான அர்ப்பணிப்பு உள்ளிட்ட உயர் கல்வி சாதனைகளின் பதிவைக் கொண்டிருக்க வேண்டும். சமூகத்திற்கான அர்ப்பணிப்பு உட்பட பல்கலைக்கழகத்தின் நெறிமுறைகள் மற்றும் பணி பற்றிய ஆழமான புரிதலையும் அவர் கொண்டிருக்க வேண்டும்.

துணைவேந்தர், மிக உயர்ந்த கல்விச் சம்பள அளவைப் பெறுவதற்கும், சம்பளத்தில் 15% பொழுதுபோக்குக் கொடுப்பனவாகப் பெறுவதற்கும் பதவிக்குப் பொருந்தக்கூடிய பிற கொடுப்பனவுகளைப் பெறுவதற்கும் தகுதியுடையவர்.

விண்ணப்பங்கள் அல்லது பெயர் முன்மொழிவுப் படிவத்துடன் பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

1. பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிக்கான தொலைநோக்கு அறிக்கை, துணைவேந்தர் பதவிக்கு நியமிக்கப்பட்டால் அவர் என்ன சாதிக்க வேண்டும் என்பதற்கான சுருக்கமான விவரம் மற்றும் பிறந்த தேதி விண்ணப்பதாரரின் / பெயரிடப்பட்டவரின் முழுமையான சுய தரவு.
2. தற்போதைய துணைவேந்தர் விண்ணப்பதாரராக இருந்தால் அல்லது இதற்கு முன்பு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக பதவி வகித்திருந்தால், மேற்படி 1ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட ஆவணங்களுக்குப் புறம்பாக அவர் தனது முதல் பதவிக் காலத்தில் செய்த சாதனைகளை முன்னிலைப்படுத்தும் அறிக்கையை அளிக்க வேண்டும்.
3. பெயர் முன்மொழிவு என்பதானால் பெயரிடப்படுபவரின் விருப்பம் சகிதமான கடிதம்.
4. விண்ணபதாரர் / பெயரிடப்பட்டவர் பொதுச் சேவை, கூட்டுத்தாபனம், சட்டப்பூர்வ அமைப்பு மற்றும் இலங்கையின் வயம்பப் பல்கலைக்கழகம் அல்லாத உயர் கல்வி நிறுவனங்களில் சேவையாற்றும் பட்சத்தில், அவர் பதவிக்கு நியமிக்கப்பட்டால் விண்ணப்பதாரர் / பெயரிடப்பட்டவரை இச்சந்தர்ப்பத்தில் விடுவிக்கப்பட முடியுமா என்பதைக் குறிக்கும் தொழில்தருநரின் ஒரு கடிதம்.

விண்ணப்பங்கள் /பெயர் முன்மொழிவுகளை "பதிவாளர், பேரவை செயலாளர், பதிவாளர் அலுவலகம், இலங்கை வயம்ப பல்கலைக்கழகம், குளியாப்பிட்டிய" என்ற முகவரிக்கு 2022- ஏப்ரல் 06ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கும் வகையில் நேரில் ஒப்படைத்தல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பம்/ பெயர் முன்மொழிவுகளைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மூலையில் துணைவேந்தர் பதவி என்று குறிக்கப்பட வேண்டும்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 02/2020ஆம் இலக்க சுற்றுநிருபத்தில் பரிந்துரைக்கப்பட்ட மதிப்பீட்டிற்கான மூலப்பிரமாணங்களின் பிரகாரம் நடத்தப்படும் நேர்முகத் தேர்வு விண்ணப்பங்கள் / பெயர் முன்மொழிவுகளின் முடிவுறுத்தப்பட்ட இறுதித் தேதிக்குப் பிறகு இரண்டு மாதங்களுக்குள் மதிப்பீட்டுக் குழுக் கூட்டம் கூட்டப்படும். இதற்காக நியமிக்கப்பட்ட மதிப்பீட்டுக் குழுவின் நேர்முகத் தேர்வுக்கு விண்ணப்பதாரர்கள் அழைக்கப்படுவார்கள். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் இணையதள இணைப்பைப் பார்வையிடுவதன் மூலம் விவரங்களைப் பெறலாம் https://www.ugc.ac.lk/en/policy/commission-circulars/176-circulars-published-in-2020-012020-and-above/2198-commission-circular-no-022020-appoinment-to-the-post-of-vice-chanceller.html. ஒரு விதிவிலக்கான சூழ்நிலையில், எந்தவொரு விண்ணப்பதாரரும் மதிப்பீட்டுக் குழுவின் முன் தோன்ற முடியாத நிலையில் அவர் வீடியோ கூட்டம் (conference) மூலம் நேர்முகத் தேர்விற்குத் தோன்ற அனுமதிக்கப்படலாம்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு விண்ணப்பதாரர்களின் மூன்று பெயர்களை சிபாரிசு செய்யும் நோக்கத்திற்காக மதிப்பீட்டுக் கூட்டம் கூட்டப்படும் அதே நாளில் விசேட பேரவை கூட்டம் ஒன்று கூட்டப்படும்.

மதிப்பீட்டுக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றும் பேரவையால் அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் குறைந்தபட்சம் பத்து (10) நிமிடங்களுக்கு ஆனால் பதினைந்து (15) நிமிடங்களுக்கு விஞ்சாதல ஒரு சுருக்கமான விளக்கக்காட்சிக்காக சிறப்பு பேரவை கூட்டத்திற்கு முன் அழைக்கப்படுவார்கள், எவ்வாறாயினும், அத்தகைய வேட்பாளர் பேரவை உறுப்பினராக இருந்தாலும், மற்ற வேட்பாளர்களின் விளக்கக்காட்சி மற்றும் மதிப்பீட்டில் பங்கேற்க எந்த வேட்பாளரும் அனுமதிக்கப்பட மாட்டார்கள். ஒரு விதிவிலக்கான சூழ்நிலையில், எந்தவொரு வேட்பாளரும் சிறப்பு பேரவை கூட்டத்திற்கு முன் தோன்ற முடியாத நிலையில், அவர் வீடியோ கூட்டம் (conference) மூலம் விளக்கக்காட்சியை வழங்க அனுமதிக்கப்படலாம்.

மூன்று அபேட்சகர்களின் பெயர்கள் சிபாரிசு செய்யப்பட்டு விசேட பேரவை கூட்ட அறிக்கையைத் தயாரித்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 02/2020ஆம் இலக்க சுற்றுநிருபத்தில் காட்டப்பட்டுள்ள சகல ஆவணங்களுடன் மேலதிக நடவடிக்கைகளுக்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பிக்கப்படும்.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் / பெயர் முன்மொழிவுகள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது என அறிவிக்கப்படுகின்றது.

**பேரவைச் செயலாளர் மற்றும் பதிவாளர்,**
**இலங்கை வயம்ப பல்கலைக்கழகம், குளியாப்பிட்டிய.**
**2022-02-04.**